**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 52/2022**

**PW. 5**

**Date: 17.02.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.அகஸ்டின் ராஜ் | வயது | 40 |
| கணவர்/தந்தை பெயர் | பன்னீர் செல்வம் | தொழில் | – |
| கிராமம் | கடலாடிகுளம் | வட்டம் | செஞ்சி |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **17th February 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 கு.வி.மு.ச கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

1. நான் சன்டரிங் அடிக்கும் வேலை பார்க்கிறேன். கடந்த **15/04/2018** அன்று நான் என்னுடைய கந்தன்சாவடியில் சன்டரிங் வேலை பார்த்து கொண்டு இருந்தபோது என்னுடைய அண்ணன் லியோ பிரான்சிஸ் மற்றும் அவருடைய மனைவி ஆகியோர் எனக்கு போன் செய்து அவரது மகன்களான சின்னப்ப ராஜ் மற்றும் சகாய ராஜ் ஆகியோர் அவர்கள் படித்து கொண்டு இருந்த கோவளம் சென்ஜோசப் விடுதியில் மொபைல் போனை திருடிவிட்டதாக சொல்லி அந்த விடுதியின் காப்பாளர்

சின்னப்பராஜை 2 நாட்கள் அறையில் அடைத்து வைத்து தாக்கியதாகவும், பிளாஸ்டிக்கை ஒட்டும் கன்னை வைத்து சூடுவைத்ததாகவும் செட்டிநாடு மருத்துவமனையில் சின்னப்பராஜ் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வரசொன்னார்கள்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் **(பார்வை மகஜர்)** உள்ள கையொப்பம் முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(16/04/2018 தேதியிட்ட பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (**எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்**) ஆகியவற்றில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 16/04/2018 அன்று மதியம் 02.30 மணியளவில் போலிசார் அந்த விடுதியை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதற்காக முதல் ஆவணத்தில் (பார்வை மகஜர்) கையொப்பம் செய்தேன்.

3. அங்கு எதிரி வைத்து இருந்த பிளாஸ்டிக் ஒட்டும் கன்னை போலிசார் அங்கு இருந்து எடுத்து கொண்டு அவரை அழைத்து வந்தார்கள். அதற்காக அந்த ஆவணங்களில் (எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்) ஆகியவற்றில் கையொப்பம் செய்தேன். (**16/04/2018 தேதியிட்ட எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் ஆகியவற்றில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் அந்த இடத்தை பார்த்து மேப் போட்டார்கள். எதிரியை உள்ளே அழைத்து செய்து அவர் மேசை டராயரில் வைத்து இருந்த அந்த கன்னை கைப்பற்றினார்கள்.

4. என்னால் அந்த பிளாஸ்டிக் ஒட்டும் கன்னை பார்த்தால் அடையாளம் காட்ட

முடியும். இந்த வழக்கின் எதிரியை பார்த்தாலும் என்னால் அடையாளம் கூறமுடியும். என்னுடன் சாட்சி சாலமன் ராஜ் என்பவர் கையொப்பம் செய்தார்.

**சாட்சி எதிரி மற்றும் வழக்கு சொத்தை அடையாளம் காண்பிப்பதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d- K.Nilavarasan, 17.02.2026,
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.